**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - O.S.No.1/2014 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.எஸ்.மோகன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில் தக்கார்/நிர்வாக அதிகாரி நிலை.2.திரு.சக்தி | த/பெ.: | |
| தொழில்: | | மதம்: | |
| கிராமம்: | | ஜாதி: | |
| வயது: | | வட்டம்: காஞ்சிபுரம் | |

**முதல் விசாரணை: - 06.09.2018**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில் தக்கார். அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோவில், திருநீர்மலையின் நிர்வாக அதிகாரி நிலை 2 ஆக பணியாற்றுகிறேன். வழக்குரையுடன் 12 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனு மூலம் கூடுதலாக 4 ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் வேண்டுகிறேன்.

(ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்படுகிறது).

**O.S.No.1/2014 P.W.1-.திரு.சக்தி 08.02.2019**

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி:-**</u>

வாதி ஆஜர். ஏற்கனவே இவ்வழக்கில் 06.09.2018 அன்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, முதல் விசாரணை பகுதியாக பதிவு செய்யப்பட்டது. தற்போது கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதை முதல் விசாரணை தொடர்ச்சியாக பதிவு செய்ய வேண்டுகிறேன். கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 14 ஆவணங்கள் குறிப்பிட்டிருக்கிறேன். அதனை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. பட்டா ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.1.
2. சிட்டா ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2.
3. Extract of field survey Register ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.3.
4. கடிதம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.4.
5. கடிதம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.5.
6. Copy of Letter வா.சா.ஆ.6.
7. Copy of Complaint வா.சா.ஆ.7
8. 10.12.2013 தேதியிட்ட Receipt வா.சா.ஆ.8
9. Copy of Representation வா.சா.ஆ.9.
10. Guide line value வா.சா.ஆ.10.
11. கிரய பத்திர எண்.1222/1933 வா.சா.ஆ.11.
12. G.O.Ms.No.260 Tourism, Culture and Religious Endowments Department (RE4-2) dt:06.11.2015 வா.சா.ஆ.12.
13. 30.11.2013 தேதியிட்ட பொது அறிவிப்பு வா.சா.ஆ.13.
14. 23.03.1999 தேதியிட்ட Proceedings of Special Commissioner, H.R. & C.E. Department, Chennai-34 வா.சா.ஆ.14.

(வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில ஆவணங்கள் வருவாய் துறையில் இருந்து பெறப்படாமல் அறநிலைய துறை இணை ஆணையரால் கையொப்பமிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், நகல்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்து 1 முதல் 14 ஆவணங்களுக்கும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>**குறுக்கு விசாரணை:**</u>

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். தாவா சொத்து கோவிலுக்கு சொந்தமானது. அந்த சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தை அகற்றி சொத்தின் சுவாதீனம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் வாதி கோவிலின் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுகிறேன். வாதி கோவில் அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில். தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கோவில் அலுவலகத்தில் தான் இருக்கும். நான் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோவில் திருநீர்மலை கோவிலில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுகிறேன். அந்த கோவிலின் நிர்வாகத்தின் கீழ் வரும் 14 உள்கோவில்களுக்கும் நான் தான் நிர்வாக அதிகாரி. அந்த 14 உள்கோவில்களில் ஒன்று தான் வாதி கோவிலான அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில். என்னுடைய பணி நிமித்தமான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த 14 உள்கோவில்களுக்கும் நான் தான் நிர்வாக அதிகாரி என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. முதல் பிரதிவாதி கோவில் நிர்வாகத்தின் மீது தாக்கல் செய்த வழக்குகள் பற்றி தெரியுமா என்றால் RCOP வழக்கு பற்றி தெரியும். அந்த RCOP வழக்கு ஆலந்தூர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அதன் தற்போதைய நிலை பற்றி எனக்கு தெரியாது. அந்த RCOP வழக்கில் இதே கோவில் சார்பாக வேறொரு நிர்வாக அதிகாரி வந்து சாட்சியம் அளித்திருக்கிறார் என்றால் அது சரியல்ல. குமரேசன் என்பவர் வாதி கோவிலில் எனக்கு முன்பாக இருந்த நிர்வாக அலுவலர். நான் இந்து சமய அறநிலைய துறையின் கீழ் பணியாற்றுகிறேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். வாதி கோவில் சுமார் 200 ஆண்டுகளாக இருக்கிறது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனக்கு இந்த வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் எந்தெந்நத கோவிலுக்கு E.O ஆக இருக்கிறேன் என்றால் நான் தற்போது பெசன்ட் நகரில் உள்ள அஷ்டலட்சுமி கோவிலுக்கு E.O ஆக உள்ளேன். நான் கோவில் நிர்வாக அதிகாரியாக இருக்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த திருக்கோவில் சார்பாக வழக்கு தொடுப்பதற்கு அதிகாரம் வழங்கபட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் ஈசா பல்லாவரத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் பழைய சர்வே எண்.57/2, புதிய டவுன் சர்வே எண்.77 ஆகும். பிரதிவாதிகள் இருக்கும் சர்வே எண்தான் நான் சொல்லிய சர்வே எண் என்றால் அதே சர்வே எண்ணில்தான் 2 முதல் 5 பிரதிவாதிகள் இருக்கிறார்கள். கோவிலின் பெயர் என்னவென்றால் அருள்மிகு ஆஞ்சநேயர் ஸ்வாமி திருக்கோவல் ஆகும். கோவில் உள்ள இடம் ஈசா பல்லாவரம். திருக்கோவிலை யார் முதன் முதலில் நிர்வாகம் செய்தார் என்றால் வழக்கு சொத்தை ராமய்யா செட்டியார் கோவிலுக்கு தானமாக கொடுத்து, கமிட்டி அமைத்து அதன்மூலம் கோவிலை நிர்வாகம் செய்து வந்தார். என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் இந்து சமய அறநிலைய துறையில் நிர்வாக அதிகாரியை நியமிப்பார்கள் என்றால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை வரும்போது நிர்வாக அதிகாரியை நியமிப்பார்கள்.

(முதல் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

5, 6 மற்றும் 7வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

எந்த தேதியில் எதன் அடிப்படையில் H.R.&C.E. கோவில் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது என்று தெரியுமா என்றால் 1993ல் வழக்கு சொத்து தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது, அப்பொழுதில் இருந்து H.R.&C.E. கோவில் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது. அவ்வாறு H.R.&C.E. கோவில் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரிவு 45ன் படி தாவா கோவில் மற்ற கோவில்களின் Fit Person ஆக நியமிப்பதற்கு H.R.&C.E. Commissioner பிரிவு 45ன் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் H.R.&C.E. பிரிவு 45(1)ன் கீழ் உத்தரவு பிறப்பித்துள்ளார். வாதி கோவிலுக்கு எங்கெல்லாம் சொத்து உள்ளது என்றால் வாதி கோவிலுக்கு 4 சர்வே எண்களான சர்வே எண்.54, 57/1, 57/2 மற்றும் 701 ஆகிய இடங்களில் சொத்து உள்ளது. மேற்படி சர்வே எண்களில் யார், யார் குடியிருக்கிறார்கள் என்றால் மேற்படி சர்வே எண்கள் அனைத்தையும் ஆக்கிரமித்து குடியிருக்கிறார்கள், அவர்களுக்கு H.R.&C.E. சட்டத்தின்படி பிரிவு 78ன் கீழ் நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து, அதை நீதிமன்றத்தின் மூலம் திரும்ப பெற்றேன் என்றால் நான் ஏற்கனவே பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்தபோது முதல் பிரதிவாதி இறந்துவிட்டதால், நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை கூடுதலாக தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். வா.சா.ஆ.13 அறிவிப்பு குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.13 அறிவிப்பு எவ்வாறு எனக்கு கிடைத்தது என்றால் அது எங்கள் கோவில் நிர்வாக ரெக்கார்டில் இருந்தது.

(5, 6 மற்றும் 7வது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

5, 6 மற்றும் 7வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

வாதி கோவிலை எப்பொழுது HR&CE எடுத்துக் கொண்டது என்றால் 1989ல் உத்தரவு போடப்பட்டு 1990ல் கோவில் நிர்வாகத்தை HR&CE பொறுப்பு ஏற்றுக் கொண்டது. அவ்வாறு கோவிலில் பொறுப்பேற்ற நிர்வாக அதிகாரி யார் இருந்தார்கள் என்றால் முதலில் Fit person நியமிக்கப்பட்டு அதன் பிறகு 5 வருடங்கள் கழித்து E.O, நியமிக்கப்பட்டார். ஒரு E.O. Fit person ஆக இருந்து வழக்கு தாக்கல் செய்யவேண்டுமென்றால் Commissioner-ன் அனுமதி பெற்றுத்தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும். அவ்வாறு Commissioner-ன் அனுமதி பெறப்பட்டதா என்றால் அவசரத்தை கருதி கோவில் சொத்தை காப்பாற்ற வேண்டுமென்பதற்காக உடனடியாக Fit person மூலமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதன் பிறகு Commissioner-ன் உத்தரவு பெறப்பட்டது. வா.சா.ஆ.14 ஆவணத்தில் Special Commissioner HR&CE-ல் எந்த தேதியில் E.O., நியமிக்கப்பட்டார் என்றால் 23.03.1999ல் நியமிக்கப்பட்டார். அதற்கு முன்பே Fit person ஆக 1989ல் நியமிக்கப்பட்டு, 1993ல் HR&CE-ன் பொறுப்பை கோவில் நிர்வாகம் எடுத்துக் கொண்டது. அது குறித்து வா.சா.ஆ.13 பொது அறிவிப்பு 30.11.1993 அன்று கொடுக்கப்பட்டது. இந்த வழக்கிற்காகதான் காலதாமதமாக வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 குறித்து என்னுடைய வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடாத காரணத்தினால் மேற்படி ஆவணங்கள் ஏற்புடைய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12ன் G.O.MS.No.260-ன் படி வாதி கோவிலை HR&CE Commissioner அளித்த தகவலின் படியோ அல்லது சுயமாகவோ எந்த காரணத்திற்காக தனி நபர்வசமிருந்த வாதி கோவிலை HR &CE Department-ன் கீழ் கொண்டுவரப்பட்டது என்று கூறியுள்ளது குறித்து வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதிகள் கோவில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தால் HR&CE பிரிவு 78ன் கீழ் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றும், அவ்வாறு பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுத்தோமா என்றால் இந்த வழக்கு சொத்தின் உரிமை குறித்து போடப்பட்டுள்ளதால் HR&CE பிரிவு 78ன் கீழ் நடவடிக்கை எடுக்கவில்லை. முதல் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்றால்

சரியல்ல, அவர் கோவில் சொத்தின் ஆக்கிரமிப்பாளர். முதல் பிரதிவாதியின் மீதும், அவரது வாடகைதாரர் மீதும் RCOP.3/2008 தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியும், அதன் முழு விவரம் எனக்கு தெரியவில்லை. அந்த RCOP.3/2008 வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் பேரில் E.P.No.176/2012 ஆலந்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. E.P.No.176/2012 மனுவில் E.A.No.317/2013 தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் அந்த RCOP.3/2008 வழக்கில் கோவில் தரப்பினராக இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் மற்ற பிரதிவாதிகள் தாவா சொத்தில் எப்பொழுது குடியேறினார்கள் என்பது குறித்து தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதி மற்றும் மற்ற பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள், கோவில் சொத்தை எப்பொழுது ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று தெரியாது. தாவா சொத்து கோவிலுக்கு எப்படி உரிமையானது என்பதற்கு சரியான ஆவணங்கள் மற்றும் சங்கதிகள் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல, சரியான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 5 முதல் 7 பிரதிவாதிகள் இந்த வழக்கு சொத்தில் 75 வருடங்களாக இருக்கிறார்கள் என்றும், அதற்காக வீட்டு வரியையும் செலுத்தி வருகிறார்கள் என்றும், இன்றைய நாள் வரையில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், வழக்கானது காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 இந்த வழக்கு தாக்கல் செய்ய வேண்டி என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கடிதத்தில் தாவா கோவிலானது வாதிக்கு எவ்வாறு போனது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல, 5 முதல் 7 பிரதிவாதிகள் கோவில் சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள்.

<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் கோவிலுக்கு சொந்தமானது. தாவா சொத்தில் முதன்முதலில் வாடகைக்கு யார் இருந்தது என்றால் வாடகைக்கு யாருமில்லை,

எல்லோருமே கோவில் சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள். நான் தாவா சொத்தை போய் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் பார்த்தபோது தாவா சொத்து யார் அனுபவத்தில் இருந்தது என்றால் பிரதிவாதிகள் பத்மா, தன்ராஜ், அசோக் ஆகிய ஆக்கிரமிப்பாளர்கள் அனுபவத்தில் இருந்தது. 3ம் பிரதிவாதிக்கு முன்பு அவர்களது தந்தையின் அனுபவத்தில் இருந்தது என்றால் 3ம் பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தின் ஆக்கிரமிப்பாளராக இருந்தார். 3ம் பிரதிவாதி கோவில் நிர்வாகத்தாரிடம் வாடகைதாரராக நியமிக்க வேண்டுமென்று வா.சா.ஆ.4 மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் ஆக்கிரமிப்பாளர்களாக இருந்ததால் வாடகைதாரராக நியமிக்கவில்லை. தற்போது அனுபவத்தில் இருக்கின்ற 3ம் பிரதிவாதியை வாடகைதாரராக நியமிக்க முடியுமா என்றால் அரசாணையில் உள்ளபடி சட்டவிதிகளை ஏற்று அதன் நடைமுறையை பின்பற்றினால் முடியும். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. 3ம் பிரதிவாதி வாடகைதாரராக இருப்பதற்கு தயாராக உள்ளார் என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் அது குறித்து என்னால் சொல்லமுடியாது. 5 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் அனைத்து பிரதிவாதிகளும் வழக்கு சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள்தான்.

**மறு விசாரணை**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.1/2014 D.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | தன்ராஜ் | தொழில் |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 03.04.2025**

நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் தாக்கல் இல்லை.

**5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)